Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.90/2021

Depositions of : PW7
solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Mani | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of December - 2024.

(எதிரிஆஜர்).

முதல் விசாரணை:-

நான் தற்பொழுது திருவள்ளூர் காவலர் பயிற்சி பள்ளியில் எலெக்ட்ரிஷனாக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 24.11.2019 அன்று நான் ஆவடி தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் காவலராக பணி புரிந்து வந்தேன். அன்றைய தினம் எனக்கு முன்பாக சாட்சியம் அளித்த பாலசந்திரனுக்கு கீழாக நான் பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் இரவு 1.00 மணிக்கு எனக்கு போன் கால் வந்தது. 62/7 குவார்டர்ஸில் வெங்கடேசன் மீது தீ வைத்து விட்டு சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் நேரில் சென்று பார்த்தேன். ராஜ்குமார் வீட்டில் உள்ள டேப்பிற்கு கீழே அவர் உட்கார்ந்திருந்தார். அதன் பிறகு 108க்கு போன் செய்தேன் அரை மணி நேரமாக வரவில்லை. 64வது குவார்டர்ஸில் இருக்கும் ஆட்டோவைத்திருப்பவரை அழைத்து ஸ்டெட்போர்டுக்கு அனுப்பி வைத்தோம்.

அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்துக்கொண்டார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.90/2021

Depositions of : PW6
solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Balachandaran | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of December - 2024.

(எதிரிஆஜர்).

முதல் விசாரணை:-

எனது பெயர் பாலசந்திரன். நான் காவல் துறையில் இரண்டாம் நிலை காவலராக ஆவடி டேங்க் பேக்டரி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பாக கடந்த 2016-2022 வரை நான் ஆவடி தமிழ் நாடு சிறப்பு காவல் படையில் காவலர் குடியிருப்பு பொறுப்பு காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 24.11.2019 அன்று இரவு சுமார் 1.00மணியிருக்கும் அப்பொழுது குவர்டர்ஸில் இருக்கும் வடிவேல் என்னும் போலீஸ் போன் செய்தார். வெங்கடேஷ் என்பவருக்கு தீ பற்றிவிட்டது கத்திக்கொண்டிருக்கிறார் சீக்கிரம் வா என்று சொன்னார். நான் உடனே அங்கு சென்றேன். அங்கு நான் சென்று பார்த்த பொழுது வெங்கடேஷ் என்பவர் பக்கத்து வீட்டு பாத்ரூமில் உட்கார்ந்து இருந்தார். நான் அவரை வெளியே வரச்சொல்லி கூப்பிட்டேன் அவர் வெளியே வந்தார். அப்பொழுது அவர் ஆஷா என்பவர் எண்ணெய் ஊத்தி கொளுத்திவிட்டு

ஓடிவிட்டார் என்று கூறினார். நான் உடனே இன்ஸ்பெக்டருக்கும், கமான்டருக்கும் தகவல் தெரிவித்தேன். அவர்கள் ரூட்டி "நான் கமாண்டிங" ஆபீசரை வர சொல்லி மருத்துவனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள். நான் 108க்கு போன் செய்தேன். அவர்கள் வர நேரம் ஆனது. ஆட்டோ மூலமாக வெங்கடேஷை ஸ்டெட்போர்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அங்குபோன பொழுது இங்கு பார்க்க முடியாது. கீழ்ப்பாக்கத்திற்கு அழைத்து போக சொன்னார்கள். நான் ரூட்டி ஆபிசரையும் என்.சி.ஓ வையும் அவருடன் செல்ல கூறி அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்துக்கொண்டார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

அந்த பில்டிங் முழுவதற்கும் நான் தான் பொறுப்பு என்றால் மொத்த குறடியிருப்பிற்கும் நான் பொறுப்பாக இருந்தேன். என்னுடைய பணி 24 மணி நேரப்பணி. என்னுடைய பணியை காட்டுவதற்கு பதிவேடு ஒன்றை பாராமரிக்கின்றேன். அந்த பதிவேட்டை பார்த்தால் தான் அந்த தேதியில் அந்த நேரத்தில் நான் ரூட்டியில் இருந்ததை சொல்ல முடியும் என்று சொன்னால் அந்த பதிவேட்டில் அந்த விவரம் இல்லை. தலைமை அலுவலகத்தில் பராமரித்து வரப்படும் பொது நாட்குறிப்பேட்டை பார்த்தால் நான் அந்த தேதியில் ரூட்டியில் இருந்தேனா, இல்லையா என்பது தெரியவரும். இந்த பொது நாட்குறிப்பேட்டை ஆய்வாளர் எழுதுவார். அதில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு முறை விவரங்கள் தொகுத்து எழுதப்படும். போலிசார் என்னை வெங்கடேசன் இறப்பதற்கு முன்பே விசாரணை செய்தார்கள். என்னை போலிசார் விசாரித்த பொழுது "**நான் சென்று பார்த்த பொழுது பக்கத்து வீட்டு குழாய் அடியில் வெங்கடேசன் உட்கார்ந்து இருந்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல.** நான் வெங்கடேசனை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற பொழுது ஆட்டோ வரை நடந்தே வந்தார். இந்த சம்பவத்திற்கு பிறகு எந்த தேதியிலாவது போலிசார் என்னிடம் ஆஷாராணியை அடையாளம்

காட்டச் சொன்னார்களா என்றால், அவ்வாறு சொல்லவில்லை. "**நான் தற்பொழுது தான்** ஆஷாராணி **வெங்கடேசன் மீது எண்ணெய் ஊற்றி தீ வைத்ததாக எனது சாட்சியத்தை கூடுதலாக்கி சொல்லுகின்றேன் என்றாலும், போலிசார் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல**". இறந்தவர் போலீஸ் என்பதாலும், நானும் போலீஸ் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் பாக்கெட் டைரி பராமரிப்பது இல்லை. நான் உண்மையிலேயே நான் சொல்வதைப்போல் டூட்டியில் இருந்திருந்தால் போலிசார் என்னை விசாரித்த பொழுது என்னுடைய பாக்கெட் டைரி, பொது நாட்குறிப்பேடு ஆகியவற்றை அவர்களிடம் ஒப்படைத்திருப்பேன் என்றால், போலிசார் என்னிடம் கேட்கவில்லை.

மறுவிசாரணை இல்லை.